தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 46 /பேரூ/2021

நாள் 06.12.2021

திரு. சு. கண்ணன்,
மூலைக்கரைப்பட்டி,
திருநெல்வேலி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட 30A எடுப்பல் கக்கன் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. சு. கண்ணன் என்பவரது 24.06.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.7.2021ல் பெறப்பட்டு 46/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட 30A எடுப்பல் கக்கன் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. சு. கண்ணன் என்பவர் தமது 24.6.2021 நாளிட்ட மனுவில் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இனங்களில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என்றும், மேற்படி முறைகேடுகள் குறித்து விசாரணை மேற்கொண்டு அம்முறைகேடுகளுக்குக் காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க தக்க ஆணைகளை பிறப்பிக்குமாறு கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார்:-

குற்றச்சாட்டு 1:

மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் ஒரே ஒரு டீசல் வாகனம் டிப்பர் ஆட்டோ TN72BW7150 மட்டும் உள்ளதாக மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி பொது தகவல் அலுவலர் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனு எண்.36/2021 நாள் 15.4.2021 கடிதத்தில் தகவல் வழங்கியுள்ளார். பெட்ரோலில் இயங்கும் வாகனம் ஏதுமில்லை. பெட்ரோலில் இயங்கும் கொசு

மருந்து தெளிக்கும் இயந்திரமும் பழுதான நிலையில், எந்த தெருக்களிலும், மருந்து தெளிக்காமல் உள்ளது. இந்நிலையில், கீழ்க்கண்ட அட்டவணைபடி தனிநபர் ஒருவருக்குச் சொந்த பயன்பாட்டிற்கு வாங்கிய பெட்ரோலுக்கும் சேர்த்து பேரூராட்சி நிதியிலிருந்து காசோலை வழங்கி மோசடி செய்து, பேரூராட்சிக்கு நிதி இழப்பினை நிர்வாக அதிகாரி ஏற்படுத்தியுள்ளார். M.S.K & CO நிறுவனத்தில் பெட்ரோல் பெறப்பட்டு அந்த நிறுவன நோட்டில் ஒப்புதல் பெறப்பட்ட நகலையும் மனுதாரர் இணைத்தனுப்பியுள்ளார்.

| வரிசை எண் | வாங்கிய நாள் | லிட்டர் | தொகை | வாங்கிய நபர் |
|---|---|---|---|---|
| 1. | 5.11.2020 | 37 | 3,248 | S.MARIAPPAN |
| 2. | 1.12.2020 | 33 | 2,942 | S.MARIAPPAN |
| 3. | 3.12.2020 | 33 | 3,025 | S.MARIAPPAN |
| 4. | 18.12.2020 | 35 | 3,220 | S.MARIAPPAN |
| 5. | 29.12.2020 | 38 | 3,400 | S.MARIAPPAN |
| 6. | 20.01.2021 | 5 | 441 | S.MARIAPPAN |
| 7. | 20.01.2021 | 34.50 | 2,796 | S.MARIAPPAN |
| 8. | – .02.2021 | 37 | 3,609 | S.MARIAPPAN |
| 9. | –. 02.2021 | 38 | 3,767 | S.MARIAPPAN |
| 10. | 09.03.3021 | 34 | 3,420 | S.MARIAPPAN |
| 11. | 20.03.2021 | 37 | 3,682 | S.MARIAPPAN |
| 12. | 03.04.2020 | 34 | 3,398 | S.MARIAPPAN |
| 13. | 15.04.2021 | 30.5 | 3,091 | S.MARIAPPAN |
| 14. | 26.04.2021 | 35 | 3,479 | S.MARIAPPAN |
| 15. | 12.05.2021 | 35.5 | 3,591 | S.MARIAPPAN |
| 16. | 29.05.2021 | 34 | 3,542 | S.MARIAPPAN |
| | | 530.5 | 50,651 | |

<u>குற்றச்சாட்டு 2:</u>

மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் குடிநீர் திட்ட துணை விதிகள் எதையும் பின்பற்றாமல் புதியதாக 127 குடிநீர் இணைப்புகள் வழங்கியுள்ளார். மேற்படி குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்ட நாள் அன்றே, விண்ணப்பத்தோடு, விண்ணப்ப கட்டணம், வைப்புத்தொகை, செண்டேஜ் கட்டணம், அந்த ஆண்டு முழுவதற்கும் குடிநீர் கட்டணம் ஆகிய அனைத்திற்கும் ஒரே வரைவோலை மூலம் பெறப்பட்டுள்ளது. குடிநீர் விநியோக துணை விதியின்படி மனுதாரர் விண்ணப்பித்த பின் பேரூராட்சி ஊழியர்கள் மூலம் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் மேற்படி வேலைகளை மேற்பார்வையிடுவதற்கான கட்டணமாக 10 சதவீதம் பணியீட்டுத்தொகை செண்டேஜ் கட்டணம் நிர்ணயம் செய்யப்படும். எந்தவித மதிப்பீடும் கணக்கீடு செய்யாமல், தனக்கு பிரதிபலனைப் பெற்றுக்கொண்டு, விண்ணப்பிக்கும் போதே அனைத்து கட்டணங்களும் ஒரே காசோலை மூலம் பெறப்பட்டுள்ளது. இதனால் குடிநீர் திட்ட துணை விதிகளை மீறி, கணக்கீடு செய்யாமல் செண்டேஜ் தொகை குத்துமதிப்பாக

பெற்றுக்கொண்டு பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட காரணமாக செயல் அலுவலர் இருந்துள்ளார்.

குற்றச்சாட்டு 3:

மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் 2020–21 ஆம் ஆண்டு குடிநீர் கட்டணம் செலுத்தாத குடிநீர் இணைப்புகளுக்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடராமல் வழக்கு பதிவு செய்யப்பட்டதாக கணினியில் சாப்ட்வேர் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் கட்டணம் வசூலிக்காமல் 100 சதவீதம் வசூல் செய்ததாக உயர் அதிகாரிகளை ஏமாற்றி உள்ளார். வழக்கு பதிவு செய்யாமல், வழக்கு பதிவு செய்ததாக கணினியில் பதிவேற்றம் செய்து, மேன்மைமிகு நீதிமன்றத்தை ஏமாற்றியுள்ளார். வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளதாக பேரூராட்சி கணினியில் தெரிவிக்கப்பட்டுள்ளது இணைக்கப்பட்டுள்ளது. 100 சதவீதம் வசூல் செய்யப்பட்டதை www.etownpanchayat.com தெரிவிக்கப்பட்ட நகல் இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் 100 சதவீதம் வசூலிக்காமல் நிலுவையில் உள்ளது. அதன் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டு 4:

இறந்தவரின் பெயரில் புதியதாக குடிநீர் இணைப்புகளை வழங்கியது.

| இணைப்பு எண் | வரிவிதிப்பாளர் பெயர் | தெரு |
|---|---|---|
| 1779 | குருஸ் அந்தோணி | நாகல் குளம் உள்வாய் |
| 1781 | குருஸ் அந்தோணி | நாகல் குளம் உள்வாய் |
| 1776 | அங்கப்பன் | பெருமாள் நகர் |

மேற்கண்ட குடிநீர் இணைப்புகள் இறந்தவரின் பெயரில் வழங்கியதால் உரிய விதிகளின்படி குடிநீர் கட்டணம் வசூலிக்க வழிவகை இல்லாமல் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படும் நிலைக்கு தள்ளப்படும்.

குற்றச்சாட்டு 5:

திரு. ஆத்தி மற்றும் திரு. முனியாண்டி என்பவர் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் தூய்மைப் பணியாளராக பணியாற்றி, பணியின்போது இறந்து விட்டார். அன்னாரின் ஈட்டிய விடுப்பு, சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு சம்பளம் ஆகியவை கணக்கீடு ஏதும் செய்யாமலும், சரிபார்க்காமலும், தனது பதவியில் அலட்சியமாக செயல்பட்டு, கூடுதலாக ரூபாய் 7,00,000 மேல் வழங்கி பேரூராட்சிக்கு நிதி இழப்புக்கு காரணமாக இருந்துள்ளார்.

குற்றச்சாட்டு 6:

தமிழ்நாடு விடுப்பு விதிகள் 1933ன்படி தகுதிகான் பருவ காலத்தில் தற்செயல் விடுப்பு தவிர மற்ற விடுப்புகள் தகுதியில்லை. மேற்கண்ட மோசடிகளுக்கு உடந்தையாக இருந்த இளநிலை உதவியாளர் திருமதி பிராஸ்கின் ராணி அவர்கள் தகுதிகாண்பருவ காலத்தில் சம்பளமில்லா விடுப்பில் இருந்துள்ளார். இந்த காலத்தை பணிப் பதிவேட்டில் பதிவு செய்யாமலும், தகுதிகாண் பருவம் நிறைவு நாள் கணக்கிடுவதில் இந்த விடுப்பை எடுத்துக் கொள்ளாமலும்,

உயர் அதிகாரிகளை ஏமாற்றி, விதிகளை மீறி, இளநிலை உதவியாளருக்கு லஞ்சமாக சலுகை வழங்கி பேரூராட்சி நிர்வாக சீர்கேட்டிற்கு காரணமாக செயல் அலுவலர் அவர்கள் இருந்துள்ளார்.

2. மனுதாரரது புகார் மனு மீது மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 19.7.2021 நாளிட்ட விளக்க அறிக்கையில் குற்றச்சாட்டுகள் ஒவ்வொன்றுக்கும் கீழ்வருமாறு பதில் அளித்துள்ளார்:-

குற்றச்சாட்டு 1:

மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி 34 சதுர கி.மீ பரப்பளவுள்ள 15 வார்டுகளைக் கொண்ட பேரூராட்சியாகும். 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இப்பேரூராட்சியின் மக்கள் தொகை 11,112 ஆகும். மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி பொது சுகாதார உபயோகத்தில் பயன்பாட்டிலுள்ள பெட்ரோல் மூலம் இயங்கும் கொசுப்புகை இயந்திரங்கள் மூன்று (3) எண்ணம் நல்ல நிலையில் இயங்கிவருகிறது. அவற்றின் மூலம் 15 வார்டுகளிலும் தொய்வின்றி கொசுப்புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. மேலும், கொரோனா நோய் தடுப்புப் பணிகள், டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணிகள் மற்றும் இதர பொது சுகாதார பணிகள் தொய்வின்றி முறையாக செய்யப்பட்டு வருகின்றன. மேற்படி கொசுப்புகை இயந்திரங்களுக்கு மட்டுமே பெட்ரோல் வாங்கப்படுகிறது. இருப்புப் பதிவேட்டில் பெட்ரோல் வாங்கப்பட்ட விவரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| S.No. | Quantity | Amount | Bill No | Date |
|---|---|---|---|---|
| 1 | 37 | 3,248 | 3009 | 05.11.2020 |
| 2. | 33 | 2,942 | 3012 | 17.11.2020 |
| 3. | 33 | 3,025 | 3016 | 03.12.2020 |
| 4. | 35 | 3,220 | 3021 | 18.12.2020 |
| 5. | 38 | 3,400 | 3024 | 29.12.2020 |
| 6. | 5 | 441 | 3032 | 20.01.2021 |
| 7. | 34.5 | 2,796 | 3032 | 20.01.2021 |
| 8. | 37 | 3,609 | | 16.02.2021 |
| 9. | 38 | 3,767 | | 27.02.2021 |
| 10. | 34 | 3,420 | 3047 | 09.03.2021 |
| 11. | 37 | 3,682 | 3051 | 20.03.2021 |
| 12. | 34 | 3,398 | 3054 | 03.04.2021 |
| 13. | 30.5 | 3,091 | 3057 | 15.04.2021 |
| 14. | 35 | 3,479 | 3061 | 26.04.2021 |
| 15. | 35.5 | 3,591 | 3065 | 12.05.2021 |
| 16. | 34 | 3,542 | 3071 | 29.05.2021 |
| | 530.5 | 50,651 | | |

தனிநபர் வாகனத்திற்கு பெட்ரோல் ஏதும் போடவில்லை என்ற விவரத்திற்கு M.S.K & Co. நிறுவன உரிமையாளர் அளித்துள்ள கடித நகலினை செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார்.

குற்றச்சாட்டு 2:

அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கவேண்டும் என்ற அரசின் கொள்கையின் அடிப்படையில் பொதுமக்களின் நலன் கருதி, காலதாமதத்தை தவிர்க்கும்பொருட்டு, குடிநீர் இணைப்பு விண்ணப்பம் பெறப்பட்டவுடன், இடம் ஆய்வு செய்யப்பட்டு குடிநீர் இணைப்பு வழங்க சாத்தியக்கூறுகள் இருக்கும்பட்சத்தில், விண்ணப்ப கட்டணம், வைப்புத் தொகை, கணக்கீடு செய்யப்பட்ட சென்டேஜ் மற்றும் அந்த நிதியாண்டு முழுவதற்குமான குடிநீர் கட்டணம் ஆகியவற்றை செலுத்த கேட்பு அனுப்பப்படுகிறது. கேட்பின் அடிப்படையிலேயே விண்ணப்பதாரர்களால் விண்ணப்ப கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் தனித்தனி வரைவோலை மூலம் செலுத்தப்படுகிறது. இதில் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏதுமில்லை. விண்ணப்பம் பெறப்பட்ட நாள் மற்றும் வரைவோலை எடுக்கப்பட்ட நாள் ஆகிய விவரங்களையும் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையுடன் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

குற்றச்சாட்டு 3:

2020–2021ஆம் ஆண்டு குடிநீர் கட்டணம் செலுத்தாத 12 குடிநீர் இணைப்புகள் தற்காலிகமாக துண்டிப்பு செய்யப்பட்டு, மீதமுள்ள குடிநீர் இணைப்புகளுக்கு நிலுவையின்றி 100% வசூலிக்கப்பட்டது. மேற்படி 12 இணைப்புகளில், நாளது தேதியில் 8 குடிநீர் இணைப்புகளுக்கு நிலுவைத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 குடிநீர் இணைப்புகளுக்கு, நிலுவைத் தொகை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வினங்கள் கணினியில் நிலுவையில்தான் வைக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற நடவடிக்கை ஏதும் தொடரப்படவில்லை.

குற்றச்சாட்டு 4:

மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி 1வது வார்டு நாகல்குளம் உள்வாய் பகுதியில் கதவு எண்.13 மற்றும் 14 கொண்ட வீடுகள்திரு. குரூஸ் அந்தோணி என்பவர் பெயரில் இருந்தது. அன்னாருக்கு (1) திரு. பரிசுத்தம் (2) திரு. லிவிங்ஸ்டன் என்ற இரு மகன்கள் உள்ளனர். சொத்துவரி விதிப்பில் உரிய ஆவணங்களின் அடிப்படையில் கதவு எண்.13 கொண்ட வீடு திரு. பரிசுத்தம் என்பவர் பெயருக்கு 18.2.2021 அன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. குடிநீர் இணைப்பு எண்.1779, திரு. பரிசுத்தம் என்பவர் பெயருக்கு மாற்றம் செய்ய விண்ணப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பம் பெறப்பட்டவுடன், குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்படும். திரு. லிவிங்ஸ்டன் என்பவர் மும்பையில் தொழில் நிமித்தம் வசித்து வருகிறார். நாகல்குளம் உள்வாய் கதவு எண்.14 கொண்ட வீடு அவருக்குச் சொந்தமானது என்பதற்கான ஆவணங்களை சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார். ஆவணங்கள் பெறப்பட்ட பின்னர் நாகல்குளம் உள்வாய் கதவு எண்.14 கொண்ட வீடு மற்றும் வீட்டின் குடிநீர் இணைப்பு எண்.1781 திரு. லிவிங்ஸ்டன் என்பவர் பெயருக்கு மாற்றம் செய்யப்படும். மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி வரிவசூலர் திரு. செ. விஜயகுமார் என்பவர் முறைகேடாக online–ல் சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணங்களில் பெயர் உரிமம் மாற்றம் செய்தது தொடர்பாக 17(b) குற்றச்சாட்டு குறிப்பாணை

பிறப்பிக்கப்பட்டு, முறைகேடாக சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட இனங்கள் ரசீது போட இயலாதவண்ணம் முடக்கிவைக்கப்பட்டுள்ளது. வார்டு எண்.15, பெருமாள் நகர் கதவு எண்.6 கொண்ட வீடு திரு. அங்கப்பன் என்பவர் பெயரிலிருந்த வீடும் அவ்வாறான இனங்களில் ஒன்றாக உள்ளது. 17(b) குற்றச்சாட்டு குறிப்பாணை விசாரணை அடிப்படையில் எடுக்கப்படும் முடிவின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் 1776 இணைப்பு எண் கொண்ட குடிநீர் இணைப்பின் பெயர் மாற்றம் மேற்கொள்ளப்படும். மேற்படி மூன்று குடிநீர் இணைப்புகளுக்குமான தொகை நிலுவையின்றி வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதில் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லை.

குற்றச்சாட்டு 5:

மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறைகள் எண்.16/2017 நாள் 31.12.2021–ன்படி காலஞ்சென்ற தூய்மைப் பணியாளர் திரு. சி. ஆத்தி என்பவரின் ஊதியம் திருத்தியமைக்கப்பட்டு, மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறைகள் எண்.16/2017 நாள் 20.01.2020–ன்படி அன்னாரின் பணிக்காலத்தில் சேமிக்கப்பட்ட ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பு நாட்களை ஒப்படைப்பு செய்ய அனுமதித்து, உரிய தொகை வழங்க உத்தரவிடப்பட்டு, ரூ.7,04,000/– அன்னாரின் மனைவி திருமதி. ராதா என்பவரின் வங்கிக் கணக்கில் 12.02.2021 அன்று ஈடுசெய்யப்பட்டது. இந்நிகழ்வில் இருப்பிலிருந்த ஈட்டிய விடுப்பு 240 நாட்கள், ஈட்டா விடுப்பு 90 நாட்கள் ஊதியம் கணக்கீடு செய்யும்போது மாறுதலாக கணக்கீடு செய்யப்பட்டு ரூ.3,85,000/– கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக திருமதி. ராதா, க/பெ ஆத்தி என்பவருக்கு தொகையை பேரூராட்சி அலுவலகத்திற்கு செலுத்தக் கோரி 16.3.2021–ல் கடிதம் அனுப்பப்பட்டு, செலுத்துச்சீட்டு எண்.987 நாள் 23.03.2021–ன்படி ரூ.46,000/– செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மீதமுள்ள தொகை ரூ.3,39,000/– திருமதி. ராதா, க/பெ ஆத்தி என்பவருக்கு வழங்கவேண்டிய இறப்பு பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்து மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி வங்கிக் கணக்கில் ஈடுசெய்ய ஆவன செய்யும்படி உள்ளாட்சி நிதிக் கணக்குகள் இயக்குநர் அவர்களுக்கு 12.4.2021 மற்றும் 28.6.2021 ஆகிய தேதிகளில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு, கோப்பு நடவடிக்கையில் உள்ளது.

குற்றச்சாட்டு 6:

மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி இளநிலை உதவியாளர் திருமதி. பிராஸ்கின் ராணி என்பவர் 06.11.2017–ல் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்பட்டார். அன்னார் 24.4.2018 முதல் 10.05.2018 முடிய 17 நாட்கள் மருத்துவ விடுப்பு எடுத்துள்ளார். அக்காலத்திற்கு ஊதியம் வழங்கப்படவில்லை. பணியில் சேர்ந்து ஐந்து மாத காலமே ஆனதால், உரிய விதிமுறைகள் அறிந்திராததால் அன்னார் அவ்விடுப்பு விவரத்தை பணிப்பதிவேட்டில் பதிவு செய்யவில்லை. எனவே, தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்ய கருத்துரு சமர்ப்பிக்கும்போது மேற்படி விடுப்புக் கணக்கில் கொள்ள தவறிவிட்டது. 12.7.2021 தேதியில் மேற்படி விடுப்பை சேர்த்து திருத்திய தகுதிகாண் பருவம் விளம்பல் ஆணை பெற அனுமதி கோரி திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

3. மனுதாரர் தமது புகார் மனு குறித்து கூடுதல் ஆவணங்களை தமது 28.7.2021 நாளிட்ட கடிதம் மூலம் அனுப்பிவைத்துள்ளளர். அவர் குற்றச்சாட்டு எண்.1 குறித்து அளித்துள்ள விவரங்களின்படி 4/2020 முதல் 6/2021 வரை மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி மூலம் வாங்கப்பட்டுள்ள டீசல் மற்றும் பெட்ரோல் அளவுகளையும், அதற்கு வழங்கப்பட்டுள்ள தொகை குறித்த விவரங்களையும் அட்டவணையிட்டு அளித்துள்ளார். மேலும், திருமதி. செண்பகவல்லி, செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் பெட்ரோல் ஏதும் பெறவில்லை என்றும் தெரிவித்துள்ளார். பெட்ரோலில் இயங்கும் வாகனம் ஏதும் இல்லை என்று செயல் அலுவலர்/பொதுத் தகவல் அலுவலர் தகவல் அறியும் உ.மைச் சட்டத்தின்கீழ் தகவல் தந்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார். மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் தனிப்பட்ட முறையில் திரு. மாரியப்பன், சொந்த உபயோயத்திற்காக பெட்ரோல் முறையே 4/2020, 5/2020, 6/2020 ஆகிய மாதங்களில் 112, 102.2, 97.01 லிட்டர் வாங்கப்பட்டு, அதற்கான தொகை பேரூராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். அடுத்துவரும் மாதங்களில் கூடுலாக டீசல் வாகனம் ஏதும் வாங்காமல், கூடுதலாக இரண்டு மூன்று மடங்கு டீசல் வாங்கப்பட்டுள்ளது. 23.4.2020, 18.5.2020, 9.6.2020, 6.7.2020, 20.7.2020, 29.10.2020, 18.12.2020, 01.02.2021, 20.03.2021, 15.4.2021, 26.4.2021 ஆகிய நாட்களில் இரு நபர்களால் தனித்தனியே வாங்கவேண்டிய அவசியம் இல்லை. இதில், வாங்கிய அனைத்து நாட்களிலும் மாரியப்பன் அவர்களாலும் வாங்கப்பட்டுள்ளது. இதில் சுகாதார வாகனம் டிப்பர் ஆட்டோ ஒன்று மட்டும் இயங்குகிறது. இந்த சுகாதார வாகனத்திற்கு மாதத்திற்கு சராசரியாக 40 முதல் 50 லிட்டர் டீசல் செலவு ஆகிறதாக வண்டி ஓட்டுனர் தெரிவிக்கிறார். ஆனால் பேரூராட்சியில் ஒரு மாதத்தில் 190, 180 லிட்டர் வரை டீசல் பெறப்பட்டுள்ளதாக கணக்கு காட்டப்பட்டுள்ளது. எனவே இதில் மிகப்பெரிய ஊழல் நடைபெற்றுள்ளது. எனவே, உரிய நடவடிக்கை எடுத்து இழப்பீட்டிற்கு உண்டான தொகையினை பெற்று பேரூராட்சி கணக்கில் செலுத்திட உத்தரவிடுமாறு மனுதாரர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 28.09.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.9.2021 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மேற்கண்ட இருவரும் 28.09.2021 அன்றைய இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

முறையீட்டு மனுதாரர் திரு. சு. கண்ணன் 28.9.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "திருநெல்வேலி மாவட்டம், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் உள்ள டிப்பர் ஆட்டோ என்கின்ற வாகனத்திற்கு பேரூராட்சியின் மூலம் எரிபொருள் நிரப்பப்படுகிறது. மேற்கண்ட எரிபொருள் நிரப்புவதில் முறைகேடுகள் நடைபெறுகின்றன. பேரூராட்யின் வாகனத்திற்கு எரிபொருள் நிரப்பாமல் தங்களது சொந்த வாகனத்திற்கு பேரூராட்சி செயல் அலுவலரால் எரிபொருள் நிரப்பப்பட்டு வருகிறது. இதனால், பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுகிறது. மேலும், விதிகளை மீறி குடிநீர் இணைப்பு வழங்குதல் மற்றும் ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) பெற்றுக்கொண்டு குடிநீர் இணைப்பு வழங்குதல், பணியாளர்களுக்கு பணப்பயன் வழங்கியதில் முறைகேடு மற்றும் பணியாளர்களின் தகுதிகாண்பருவ காலத்தில் சம்பளமில்லா விடுப்பு வழங்குதல் போன்ற முறைகேடுகள் பேரூராட்சியில் நடைபெற்று வருகின்றன. பேரூராட்சியின் மூலம் வசூலிக்கப்படும் சொத்துவரி

தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றும், பேரூராட்சியின் மூலம் குடிநீர் வரி அனைத்தும் வசூலிக்கப்பட்டுவிட்டது என மாவட்ட ஆட்சியரிடம் பொய்யான தகவல்களையும் அளித்துள்ளனர். அவற்றை விசாரித்து, தவறுசெய்த அலுவலர்களின்மீது தேவையான நடவடிக்கை எடுத்திடும்படி தங்களை கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது 24.6.2021 நாளிட்ட மனுவினையே எனது கூடுதல் வாக்குமூலமாக பதிவுசெய்திடுமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 28.09.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "மனுதாரர் திரு. சு. கண்ணன் அளித்துள்ள மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் வாகனத்திற்கு எரிபொருள் நிரப்புதல், குடிநீர் இணைப்பு மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பணப்பயன்கள் மற்றும் சம்பளமில்லா விடுப்பு தொடர்பான விவரங்களை பேரூராட்சியின் பதிவேடுகளை சரிபார்த்த பின்னர், எனக்கு வழங்கப்படும் மற்றொரு விசாரணையின்போது, அனைத்து விவரங்களையும் இம்முறைமன்றத்தின்முன் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

6. மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலத்தில் கேட்டுக்கொண்டுள்ளதன் அடிப்படையில் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு 11.11.2021 அன்று மறுவிசாரணைக்கான நாள் குறிப்பிடப்பட்டு, இம்முறைமன்றநடுவ 3.11.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

7. மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 11.11.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "கடந்த 28.9.2021 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் தெரிவித்தபடி மனுதாரர் திரு. சு. கண்ணன் என்பவர் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி குறித்த புகார் மனுவில் கூறியுள்ள பேரூராட்சி வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புதல், குடிநீர் இணைப்பு மற்றும் பணியாளர்களுக்கான பணப்பயன்கள் ஆகிய புகார்கள் தொடர்பான விளக்கத்தினை எனது 9.11.2021 நாளிட்ட கடிதம் மற்றும் அதன் இணைப்புகளில் விரிவாக அளிக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

8. மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 9.11.2021 நாளிட்ட கடிதம் மற்றும் அதன் இணைப்புகளில் மனுதாரரின் புகார் மனு மீது மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் அளிக்கப்பட்ட 19.7.2021 நாளிட்ட விளக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அதே விவரங்கள் மீள எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

9. மனுதாரரின் மனு, அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், அவரது வாக்குமூலம் மற்றும் 28.7.2021 நாளிட்ட கூடுதல் அறிக்கை அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட இணைப்பு ஆவணங்கள், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரது 19.07.2021 நாளிட்ட விளக்க அறிக்கை, அவரது வாக்குமூலங்கள், வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட 9.11.2021 நாளிட்ட அறிக்கை மற்றும் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகியவை அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில், கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

❖ 31.3.2021 நாளிட்ட விண்ணப்பம் மூலம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் மனுதாரரால் கோரப்பட்ட பல்வேறு தகவல்களுக்கு பொது தகவல் அலுவலர்/

மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் வழங்கியுள்ள பதில் அறிக்கையில், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் டீசல், பெட்ரோல் வாகனங்கள் எத்தனை உள்ளன, வண்டி எண் விவரம் தரவும் என்று கோரியுள்ளதற்கு அளிக்கப்பட்டுள்ள பதிலில் "டிப்பர் ஆட்டோ 1 எண்ணம் - TN.72BW 7150" என்று பதில் தரப்பட்டுள்ளது. இதன்படி மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் ஒரே ஒரு டிப்பர் ஆட்டோ மட்டுமே உள்ளது என்பது உறுதியாகிறது. ஆனால் மேற்படி டிப்பர் ஆட்டோ டீசல் மூலம் இயங்குகிறதா அல்லது பெட்ரோல் மூலம் இயங்குகிறதா என்பது தெளிவாக்கப்படவில்லை.

- ❖ மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி பொது சுகாதார உபயோக பயன்பாட்டில் பெட்ரோல் மூலம் இயங்கும் கொசுப்புகை இயந்திரங்கள் மூன்று (3) எண்ணங்கள் நல்ல நிலையில் உள்ளதென்றும், அவற்றின் மூலம் 15 வார்டுகளிலும் கொசுப்புகை மருந்து அடிக்கப்பட்டு வருவதாகவும், அவ்வியந்திரங்களுக்கு மட்டுமே பெட்ரோல் வாங்கப்படுகிறது என்று மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 19.7.2021 மற்றும் 9.11.2021 நாளிட்ட அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளார்.

- ❖ மனுதாரரால் வாகன எரிபொருள் முறைகேடு குறித்து வழங்கப்பட்டுள்ள அட்டவணையில் 5.11.2020 முதல் 29.5.2021 முடிய மொத்தம் 530.5 லிட்டர் பெட்ரோல் ரூ.50,651/– செலவீட்டில் வாங்கப்பட்டுள்ளதாகவும், பெட்ரோல் வாங்கியவர் பெயரில் S. மாரியப்பன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி நபரால் எரிபொருள் வாங்கப்பட்டுள்ளது என்பது மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள M.S.K & CO நிறுவன நோட்டு நகலில் S. Mariappan என்பவரால் கையொப்பமிடப்பட்டுள்ளது தெளிவாகிறது.

- ❖ பெட்ரோல் பங்கிலிருந்து பேரூராட்சி நிர்வாகத்தினால் பெட்ரோல்/டீசல் வாங்கும்போது யார் யாரால் வாங்கப்பட்டது, அவர்களுக்கும் பேரூராட்சி நிர்வாகத்திற்குமான தொடர்பு என்ன என்பதை மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கைகளில் தெளிவாக குறிப்பிடவில்லை.

- ❖ பெட்ரோலால் இயங்கும் கொசுப்புகை இயந்திரங்கள் மூன்றுக்கு பெட்ரோல் மட்டுமே வாங்கப்படுவதாக மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும், பேரூராட்சியால் நிர்வகிக்கப்படும் பெட்ரோல் மற்றும் டீசல் இருப்புப் பதிவேட்டின் நகல்களில் பெட்ரோல் மற்றும் டீசல் இரண்டுமே M.S K & Co மூலம் வாங்கப்பட்டு வரவு வைக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. இதில் மனுதாரரால் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள நாட்களில் பெட்ரோல் 5 லிட்டரும், மீதி பெருமளவில் டீசலுமாக வாங்கி வரவு வைக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. பேரூராட்சியில் பொது சுகாதார உபயோகத்திற்கு பயன்பாட்டிலுள்ள பெட்ரோல் மூலம் இயங்கும் கொசுப்புகை இயந்திரங்கள் மூன்று எண்ணங்கள் உள்ளதாக மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தமது 19.7.2021 நாளிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையில், கொள்முதல் பதிவேட்டின்படி டீசல் அதிகமாக கொள்முதல் செய்யப்பட்டு வரவு வைக்கப்பட்டுள்ளது ஏன் என்பது புரியாத புதிராகிறது.

- ❖ பேரூராட்சியில் பெட்ரோலால் இயங்கும் கொசுப்புகை இயந்திரங்களுக்கு அளவுக்கு அதிகமாக டீசல் ஏன்/எவ்வாறு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பது பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. மனுதாரர் அளித்துள்ள 28.7.2021 நாளிட்ட கடிதத்தில் 1.4.2020 முதல் 29.6.2021 முடிய உள்ள காலத்தில், நாள் வாரியாக பெட்ரோல் மற்றும் டீசல் வாங்கப்பட்ட விவரங்கள், வாங்கியுள்ள அளவு அதற்கான தொகை மற்றும் யாரால்

வாங்கப்பட்டது என்கிற முழு விவரங்கள் பட்டியலிட்டு அளிக்கப்பட்டுள்ளது. அதில் தனிப்பட்ட முறையில் திரு. மாரியப்பன் என்பவரால் சொந்த உபயோகத்திற்காக பெட்ரோல் முறையே 4/2020, 5/2020, 6/2020 ஆகிய மாதங்களில் 112, 102.2, 97.01 லிட்டர் வாங்கப்பட்டு, அதற்கு பேரூராட்சி நிதியிலிருந்து பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆயினும், மனுதாரர் இது குறித்து எவ்வித ஆதாரபூர்வமான ஆதாரங்கள் எதனையும் வழங்கவில்லை.

❖ ஆனாலும், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 9.11.2021 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரால் குறிப்பிட்டுள்ள இனங்களில் டீசல் 525.50 லிட்டர் மற்றும் 5 லிட்டர் பெட்ரோல் வாங்கப்பட்டு அவை கொசுப்புகை இயந்திரங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரது 19.7.2021 நாளிட்ட அறிக்கையில் கொசுப்புகை இயந்திரங்களுக்கு மட்டுமே பெட்ரோல் 530.5 லிட்டர் வாங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு கூற்றுகளும் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையவைகளாக உள்ளன.

❖ கொசுப்புகை இயந்திரங்கள் மூலம் தினசரி அனைத்து வார்டுகளிலும் கொசு ஒழிப்பு, டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் தொய்வின்றி முறையாக செய்யப்பட்டு வருகிறதாக செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ள கூற்று நம்பக்கூடியதாக இல்லை. இதற்கு ஆதாரமாக எந்தவொரு ஆவணமோ/பொதுமக்கள் கையெழுத்திட்ட பதிவேட்டின் நகலைலோ இம்முறைமன்ற நடுவத்திற்கு மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் சமர்ப்பிக்கப்படவில்லை.

❖ பேரூராட்சி நிர்வாகத்தின் பயன்பாட்டிற்கு எவ்வளவு எரிபொருள் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதற்கான ஆதார ஆவணங்களையோ, கொசுப்புகை இயந்திரங்களின் கொள்திறன், பயன்பாட்டுத் திறன் ஆகியவை குறித்தும் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்பதோடு, அதற்கான ஆவணங்கள் எதனையும் இம்முறைமன்ற நடுவத்திற்கும் சமர்ப்பிக்கவில்லை.

❖ குடிநீர் இணைப்பைப் பொறுத்தவரை, மனுதாரர் குடிநீர் திட்ட துணை விதிகள் எதையும் பின்பற்றாமல் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 127 குடிநீர் இணைப்புகளை, இணைப்பு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்ட நாள் அன்றே விண்ணப்பத்தோடு விண்ணப்ப கட்டணம், வைப்புத் தொகை, செண்டேஜ் கட்டணம், அந்த ஆண்டு முழுவதற்கும் குடிநீர் கட்டணம் ஆகியவற்றை ஒரே வரைவோலை மூலம் பெற்று வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ள புகாருக்கு, பொதுமக்களின் நலன் கருதி, காலதாமதத்தை தவிர்க்கும்பொருட்டு, குடிநீர் இணைப்பு விண்ணப்பம் பெறப்பட்ட உடன், இடம் ஆய்வு செய்யப்பட்டு, குடிநீர் இணைப்பு வழங்க சாத்தியக்கூறுகள் இருக்கும்பட்சத்தில், விண்ணப்பக் கட்டணம், வைப்புத் தொகை கணக்கீடு செய்யப்பட்ட செண்டேஜ் மற்றும் அந்த நிதியாண்டு முழுவதற்குமான குடிநீர் கட்டணம் ஆகியவற்றை செலுத்த கேட்பு அனுப்பப்படுகிறதாகவும், கேட்பின் அடிப்படையிலேயே விண்ணப்பதாரர்களால் விண்ணப்ப கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் தனித்தனி வரைவோலை மூலம் செலுத்தப்படுகிறது என்றும், இதில் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏதுமில்லை என்று மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல்

அலுவலர் அளித்துள்ள 2020–2021ஆம் ஆண்டு குடிநீர் இணைப்பு கோரி பெறப்பட்ட விண்ணப்பங்கள் குறித்த விவர அட்டவணை ஆய்வுசெய்யப்பட்டது. விண்ணப்ப நாள், விண்ணப்ப கட்டண வரைவோலை மற்றும் கேட்புத் தொகை செலுத்தப்பட்ட வரைவோலை ஆகியவை தனித்தனியே வெவ்வேறு நாட்களில் பெறப்பட்டுள்ளதையும், விண்ணப்பம் அளித்த நாளும், மேற்படி தொகைகள் செலுத்தப்பட்ட நாளும் ஒரே நாளாக இல்லை. இப்புகார் குறித்து மனுதாரர் போதுமான ஆதார ஆவணங்கள் எதனையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கவில்லை. எனவே, மனுதாரரின் இக்குற்றச்சாட்டு நிரூபணமாகவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

- 2020–2021ஆம் ஆண்டு குடிநீர் கட்டணம் செலுத்தாத 12 இணைப்புகளில், 9 இணைப்புகளுக்கு நிலுவைத்தொகை வசூலிக்கப்பட்டும், 3 இணைப்புகளுக்கு நிலுவைத் தொகை வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு நீதிமன்ற நடவடிக்கை ஏதும் தொடரப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளதால் இதில் விதி மீறலோ, பெரிய குற்றமோ நடைபெறவில்லை என்றே ஆவணங்களின் அடிப்படையில் தெரியவவகிறது.

- இறந்தவரின் பெயரில் புதியதாக குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரர் அளித்துள்ள புகார் குறித்து ஆய்வு செய்யப்பட்டதில், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி 1வது வார்டு நாகல்குளம் உள்வாய் பகுதியில் கதவு எண்.13 மற்றும் 14 திரு. குரூஸ் அந்தோணி பெயரில் இருந்ததை அவரது மகன் கு. பரிசுத்தம் வாரிசு உரிமைச் சான்று பெற்று அளித்த 17.2.2021 நாளிட்ட விண்ணப்பத்தின் பேரில், கதவு எண்.14 என்ற வீட்டின் சொத்துவரியை (வரி விதிப்பு எண்.21) அவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 18.2.2021ல் ஆணையிட்டுள்ளார். குடிநீர் இணைப்பு எண்.1770ஐ பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பிக்க திரு. கு. பரிசுத்தம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், விண்ணப்பம் பெறப்பட்ட உடன் குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம் செய்யப்படும் என்றும் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

- 17.2.2021 அன்று விண்ணப்பம் பெறப்பட்டு, 18.2.2021ல் சொத்துவரி திரு. கு. பரிசுத்தம் என்பவரது பெயருக்கு மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் பெயர் மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது கேள்விக்குறியாகிறது/சந்தேகத்திற்கு இடமளிக்கிறது. மேலும், திரு. கு. பரிசுத்தம் என்பவரது விண்ணப்பம் மற்றும் அவர் அளித்துள்ளதாக கூறப்பட்டுள்ள வாரிசு உரிமைச் சான்றின் நகல் ஆகியவற்றை மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்பவில்லை. மேலும், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் செயல்முறைஆணையிலும் இது குறித்து தெளிவாக குறிப்பிடப்படவில்லை.

- மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் online-ல் சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணங்களில் பெயர் உரிமை மாற்றம் செய்தது தொடர்பாக வரிவசூலர் திரு. செ. விஜயகுமார் என்பவர் மீது 17(b) குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால், விசாரணை முடிவின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் 1776 இணைப்பு எண் கொண்ட குடிநீர் இணைப்பின் பெயர் மாற்றம் மேற்கொள்ளப்படும் என மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார். பேரூராட்சி செயல் அலுவலரின் கண்காணிப்பின்கீழ் பணியாற்றும்

வரிவசூலர் இதுபோன்ற முறைகேடுகளில் ஈடுபடுவது செயல் அலுவலரது கண்காணிப்பு குறைபாட்டினை உறுதிசெய்கிறது.

- மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி தூய்மைப் பணியாளராக பணியாற்றி, பணியிடையே 12.3.2016ல் காலமான திரு. ஆத்தி என்பவரது மனைவி திருமதி. ராதா என்பவருக்கு மறைந்த ஊழியரது கணக்கிலிருந்த ஈட்டிய மற்றும் ஈட்டா விடுப்புத் தொகை உரிய முறையில் கணக்கீடு செய்யப்படாமல், ரூ.3,85,000/- கூடுதலாக வழங்கப்பட்டுள்ளதும், 23.3.2021ல் திருமதி. ராதா என்பவர் ரூ.46,000/- செலுத்தியுள்ளதும், மீதித்தொகை அவருக்கு வழங்கப்படவுள்ள பணிக்கொடைத்தொகையிலிருந்து பிடித்தம் செய்து மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி வங்கிக் கணக்கில் செலுத்த உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார் என மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளது ஏற்க இயலாது.
- நிதி இனங்களில் மிகக் கவனமாக கவனம் செலுத்தி ஒருமுறைக்கு இருமுறை கணக்கிட்டினை ஊர்ஜிதம் செய்துகொள்ளாமல், கவனக்குறைவாக செயல்பட்டுள்ள காரணத்தினாலேயே இச்செயல் நிகழ்ந்துள்ளதென்று இம்முறைமன்ற நடுவம் முடிவுசெய்கிறது. இதனால், பணியிடையே 12.3.2016ல் காலமானவர் குடும்பத்திற்கு அளிக்கப்படவேண்டிய ஏனைய பணப்பயன்களும் ஓய்வூதியமும் தேவையில்லாமல் ஐந்தாண்டுகளாக நிலுவையில் உள்ளன என்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. இன்னமும், மேற்படி நிகழ்வு முற்றுப்பெறாமல் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளதும் பரிதாபத்திற்கு உரியது.
- மனுதாரரது புகார் மனுவில் தூய்மைப் பணியாளர் திரு. முடியாண்டி குறித்தும் இதே புகார் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், இதுகுறித்து மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் எதையும் தமது அறிக்கையில் குறிப்பிடவில்லை.
- பணியிடையே 12.3.2016-இல் இறந்த தூய்மைப் பணியாளர் திரு. சி. ஆத்தி என்ற பணியாளருக்கு வழங்கப்படவேண்டிய பணப்பயன்களை இதுவரை வழங்காத செயலுக்கும், மிக அலட்சியமாக ஈட்டிய மற்றும் ஈட்டா விடுப்பு ஒப்படை கணக்கிட்டு ரூ.3,85,000/- (ரூபாய் மூன்று லட்சத்து எண்பத்தைந்தாயிரம் மட்டும்) கூடுதலாக வழங்கி பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியதற்கு காரணமாக செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் மீது உரிய விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சி ஆணையாளர் அவர்களுக்கு பரிந்துரைத்து ஆணையிடுகிறது.
- மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றிவரும் திருமதி. பிராஸ்கின் ராணி 6.11.2017 முதல் பணிபுரிந்துவந்துள்ள நிலையில், அவர் 24.4.2018 முதல் 10.05.2018 முடிய துய்த்துள்ள 17 நாட்கள் மருத்துவ விடுப்பினை கருத்திற்கொள்ளாமல் அவர் 5.11.2019 முற்பகல் முதல் தகுதிகாண் பருவம் பூர்த்திசெய்ததாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறைஆணை ந.க.எண்.1864/2020/ப2 நாள் 25.6.2020ல் ஆணைபிறப்பிக்கப்பட்டுள்ளது.
- இதன் பின்னர், 12.7.2021ல் தனியர் துய்த்த மருத்துவ விடுப்பினை கணக்கிட்டு, தகுதிகாண் பருவம் பூர்த்திக்கு திருத்திய கருத்துரு மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் 12.7.2021ல் பேரூராட்சிகள் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது ஆவணங்களின் அடிப்படையில் புலனாகிறது. பணியாளர் ஒருவரது தகுதிகாண் பருவ பூர்த்தி முறைகேடாக செய்யப்பட்டுள்ளது

குறித்தும், பணியாளர் ஒருவருக்கு லஞ்சமாக சலுகை வழங்கி பேரூராட்சி நிர்வாக சீர்கேட்டிற்கு காரணமாக செயல் அலுவலர் இருந்துள்ளதாகவும் தனி நபர் ஒருவர் புகார் அளித்துள்ளதை பார்க்கும்போது இதுபோன்ற அவலங்கள் பேரூராட்சி நிர்வாகத்தில் இடம்பெறுகின்றன என்பதை இம்முறைமன்ற நடுவம் திகைப்போடு காண்கிறது.

❖ இந்நேர்வில் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் அளித்துள்ளதற்குப் பின்னரே திருத்திய தகுதிகாண் பருவ கருத்துருக்கள் குறித்து பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டு கருத்துரு சமர்ப்பித்துள்ளதால், மனுதாரரின் புகார் ஊர்ஜிதமாவதாகவே இம்முறைமன்ற நடுவம் முடிவுசெய்கிறது. புகார் மனுதாரர் இதுகுறித்து புகார் அளிக்கவில்லையெனில், இதன்மேல் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மேல் நடவடிக்கையினை தொடர்ந்திருக்க வாய்ப்பில்லை என்றே இம்முறைமன்றநடுவம் கருதுகிறது. எனவே, முறையான ஆவணங்கள் எதனையும் ஆய்வு செய்யாமல் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்துவரும் திருமதி. பிராஸ்கின் ராணி என்பவருக்கு முறையற்ற வகையில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்ததாக செயல்முறைஆணை வெளியிடுவதற்குக் காரணமான அப்போதைய மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்மந்தப்பட்ட பணியாளர்கள் மீது உரிய விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து ஆணையிடுகிறது.

10. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், பேரூராட்சி நிர்வாகம் கடைபிடிக்கவேண்டிய நடைமுறைகள், அனுமதிக்கப்படும் எரிபொருள், அதனை கொள்முதல் செய்வதில் மேற்கொள்ளப்படவேண்டிய நடைமுறைகள்/கட்டுப்பாடுகள், வரிவசூலர் மற்றும் இதர பணியாளர்களால் மேற்கொள்ளப்படும் முறைகேடுகளை தடுக்க மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள், அலுவலக நடைமுறை விதிகளை கடைபிடித்தல் ஆகியவை குறித்து ஒட்டுமொத்த பேரூராட்சிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பி அதனை பேரூராட்சிகள் தவறாமல் கடைபிடிப்பதை உறுதி செய்திடவும்/கண்காணிக்கவும் ஒரு உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

2021ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 6–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. சு. கண்ணன்,
த/பெ. சுப்பையா, 30A, எடுப்பல் கக்கன் தெரு, மூலைக்கரைப்பட்டி,
திருநெல்வேலி மாவட்டம்–627 354.

பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028. (உறையில் பெயரிடப்பட்டு)

செயல் அலுவலர்,
மூலைக்கரைப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி,
மூலைக்கரைப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்–627 354
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளர்